
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1049

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

41





படங்கள் உதவி : ஞானம்

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# ‘பிள்ளையோ பிள்ளை’: நீதியை நிலைநாட்டும் பிள்ளைகளின் கதை!

1967-ஆம் ஆண்டில், கழகம் ஆட்சியைப் பிடித்துவிட்டது. ஆகவே, தனது சமூக அரசியல் பிரச்சாரப் பணி முடிந்துவிட்டது என்று தலைவர் கலைஞர் நினைத்து ஓய்ந்து விடவில்லை, மாறாக எப்போதும் போல கலைப்படைப்பின் வழியிலான தன் கொள்கைப் பிரச்சாரத்தை அவர் தொடர்ந்து செய்து வந்ததைப் பார்க்கிறோம். அதுவும் அறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, 1972-இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சர் ஆன பின்பு, கலைஞர் கதை, திரைக்கதை வசனம் எழுதியத் திரைப்படம் ‘பிள்ளையோ பிள்ளை’ ஆகும்.

அஞ்சுகம் பிக்சர்ஸ் சார்பில், முரசொலி செல்வம் தயாரிப்பில், கலைஞரின் பராசக்தி உட்பட பல்வேறு திரைப்படங்களை இயக்கிய புகழ்பெற்ற இயக்குநர்களான கிருஷ்ணன்-பஞ்சு இயக்கத்தில் மு.க.முத்து இரட்டை வேடமேற்று கதாநாயகனாக அற்புதமாக நடித்த படம் பிள்ளையோ பிள்ளை ஆகும். இசை எம்.எஸ்.விஸ்வநாதன். மிகச் சிறப்பான பாடல்கள் இத்திரைப் படத்தில் இடம்பெற்றிருந்தன.

### படத்தின் கதைச் சுருக்கம்

களத்தூர் மிட்டாதார் கங்காதரன் (ஆர்.எஸ்.மனோகர்) மிகுந்த பக்திமான். அவரின் காதல் மனைவி காஞ்சனா (ஆர்.விஜயகுமாரி). காஞ்சனாவை கங்காதரனின் முன்னாள் வீட்டு வேலைக்காரன் முருகன் (எம்.ஆர்.ஆர்.வாசு) கடத்திச் சென்று அவளிடம் கங்காதரனின் கடந்தகால வாழ்க்கையையும், அவரின் உண்மையான குணத்தையும் பற்றி எடுத்துச் சொல்கிறான். அதாவது, ஊருக்குப் பக்திமானாக வேடமிடும் கங்காதரன் உண்மையில் கோயில் சிலைகளைத் திருடி வெளிநாட்டுக்குக் கடத்தி பணம் சம்பாதிக்கும் கடத்தல்காரன் மட்டுமல்ல. காஞ்சனாவுக்கு முன்பே கங்காதரன் பார்வதியைத் திருமணம் செய்திருந்தான். அந்த முதல் மனைவியான பார்வதியையும் (ஜி.சகுந்தலா) வீட்டு வேலைக்காரன் முருகனையும் (எம்.ஆர்.ஆர். வாசு) இணைத்துச் சந்தேகிக்கிறான். அதனால் கோபம் கொண்டு பார்வதியைத் தாக்கிக் கொலை செய்து, மாடியில் இருந்து தள்ளி விடுவதுடன் அக்கொலைப்பழியை முருகன் மீது சுமத்தி அவனுக்குத் தூக்குத் தண்டனையும் வாங்கிக் கொடுக்கிறான்.

ஆனால், மரணதண்டனைக்கு முந்திய நாள் சிறையில் இருந்து தப்பிவிடும் முருகன் கங்காதரனின் வீட்டுக்கு வருகிறான். அங்கு கங்காதரனும் அவனின் அடியாள் தாண்டவ ராயனும் பேசிக்கொண்டிருக்கும் ரகசியங்களை மறைந்திருந்து டேப்ரெக்கார்டரில் பதிவு செய்துகொண்டு தப்பி ஓடும்போது கங்கா தரனுக்கும் பார்வதிக்கும் பிறந்த குழந்தையையும் தூக்கிக் கொண்டு ஓடிவிடுகிறான். அக்குழந்தையை வளர்த்து, அவன் மூலமே கங்காதரனைப் பழிவாங்கப் போவதாகவும் காஞ்சனாவிடம் சொல்கிறான். மேலும், கங்காதரனைப் பழி வாங்கவே அவளையும் கடத்தி வந்ததாகவும் கூறுகிறான். காஞ்சனா தன்னை கங்காதரனிடம் திருப்பி அனுப்பிவிடும்படி கெஞ்சுகிறாள். முருகன் மறுத்துவிடுகிறான்.

அப்படியே மூன்று மாதங்கள் கடந்துவிட காஞ்சனா கர்ப்பம் தரிக்கிறாள், இதை அறியும் முருகன் மனம் வருந்துகிறான். காஞ்சனாவிடம் மன்னிப்புக்கேட்டு அவள் விரும்பியபடி கங்காதரனிடமே அனுப்பி வைக்கிறான். ஆனால், கங்காதரனோ கர்ப்பமாக இருக்கும் காஞ்சனா மீதும் சந்தேகப்படுகிறான். வேலைக்காரன் முருகனுடன் இணைத்துப்பேசி துன்புறுத்தி வீட்டைவிட்டுத் துரத்துகிறான். வெளியே வந்த காஞ்சனா ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்துக் கண்ணன் (மு.க.முத்து) எனப் பெயர் சூட்டிக் கூலி வேலை செய்து தன் குழந்தையை வளர்த்து ஆளாக்குகிறாள்.

அதேபோல முருகன், தான் கடத்தி வந்த குழந்தை - குமாரை (மு.க.முத்து) வளர்த்து டாக்டருக்குப் படிக்க வைத்து ஆளாக்குகிறான். காஞ்சனா தன் பெயரை கமலம் என மாற்றி வைத்துக்கொண்டு அரசு வழக்கறிஞர் நிர்மலா (எஸ். வரலெட்சுமி) வீட்டில் வேலை செய்கிறார். அரசு வழக்கறிஞரின் மகள் ராதாவும் (லெட்சுமி), ராதாவின் முறைப் பையன் ராமுவும் (நாகேஷ்) வழக்கறிஞர் பணி செய்கிறார்கள்.



டாக்டர் குமாரும் பெயிண்டர் கண்ணனும் ஒரே மாதிரியான உருவம் கொண்டிருப்பதால், டாக்டர் குமார் என நினைத்து கண்ணனை ராதா காதலிக்கிறார். அதே போல கங்காதரனின் வைர மோதிரத்தைக் கண்ணன் ஒரு நாள் திருடிவிட அதற்கான தண்டனையும் குமாருக்குக் கிடைக்கிறது. அதனால் குமாரும் கண்ணனும் மோதிக்கொள்கிறார்கள்.

ஒரு கட்டத்தில் முருகன் தன் வளர்ப்பு மகன் குமாரிடம், கடந்த காலக் கதை முழுவதையும் சொல்லி கங்காதரனைப் பழி வாங்க வேண்டும் என்கிறான். குமார் கண்ணனைச் சந்தித்து உண்மைகளை எடுத்துச் சொல்லி நாமிருவரும் அண்ணன் தம்பிகள் நம் தாய்மார்களை (பார்வதி, காஞ்சனா இருவரையும்) ஏமாற்றியவன் கங்காதரன், அவனைப் பழிவாங்குவோம் என்று ஒன்று சேர்கிறார்கள். இந்நிலையில், முன்னாள் வேலைக்காரன் முருகனைக் கங்காதரன் கொலை செய்துவிட்டு அந்தப் பழியை கண்ணன் மீது போட்டுவிட காவல் துறையினர் கண்ணனைக் கைது செய்து குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகின்றனர்.

### கணவனா, மகனா? பாசப்போராட்டம்

வழக்கறிஞர் ராதா, கண்ணனுக்கு ஆதரவாக வாதாடுகிறாள், அவளின் அம்மா அரசு வழக்கறிஞர் நிர்மலா கண்ணனுக்கு எதிராக, (கங்காதரனுக்கு ஆதரவாக) வாதாடுகிறார். கங்காதரன் காஞ்சனாவைச் சந்தித்து உனக்கு தாலி நிலைக்க வேண்டுமானால், நான் உயிரோடு இருக்க வேண்டும். எனவே, உன் மகன் கண்ணன்தான் முருகனைக் கொலை செய்தான் எனவும், நீ அதைப் பார்த்ததாகவும் பொய் சாட்சி சொல்ல வேண்டும் என்று உருக்கமாகப் பேசி மிரட்டுகிறான். கணவனா, மகனா? என்ற மனப் போராட்டத்தில் முதலில் கண்ணன் கொலை செய்ததாக நீதிமன்றத்தில் சொல்லும் காஞ்சனா இறுதியில் ராதாவின் குறுக்கு விசாரணையில் உண்மையைச் சொல்லிவிடுவதால், கண்ணன் விடுதலை யாகிறான், கங்காதரன் கைதுசெய்யப்படுகிறான். தான் செய்த தவறுகளுக்காக அனைவரிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு ராதா, கண்ணன் இருவரின் கரங்களைச் சேர்த்து வைத்துவிட்டு கங்காதரன் சிறை செல்கிறான். டாக்டர் குமார் தன் தாயார் பார்வதியை இழந்துவிட்டதால் கண்ணனின் தாயான காஞ்சனாவையே தன் தாயாக ஏற்றுக்கொள்வதுடன் படம் நிறைவடைகிறது. இதுவே படத்தின் கதை.

கலைஞரின் மாறுபட்ட திரைக்கதையைக் கொண்ட படமாகப் ‘பிள்ளையோ பிள்ளை’ அமைந்திருப்பதைக் காண்கிறோம், தவறு செய்தது தந்தையே ஆனாலும், தயவு தாட்சணியம் இன்றி மகன்கள் கண்டித்தும் எதிர்த்தும் போராடி தண்டனையும் வாங்கிக் கொடுத்து நீதியை நிலை நாட்டும் திரைக் காவியமாக இத்திரைப் படம் அமைந்துள்ளது. மேலும், பக்திமான்களாக வேசம் போடும் பல பெரிய மனிதர்களின் பின்னே, மறைந்துள்ள மோசடிகளையும் சமூக விரோதச் செயல்களையும் தனது கூர்மையான திரைக்கதை வசனத்தின் மூலம் கலைஞர் தோலுரித்துக் காட்டி பகுத்தறிவைப் புகட்டிய திரைக் காவியம்தான் பிள்ளையோ பிள்ளை.

> “தனது கூர்மையான திரைக்கதை வசனத்தின் மூலம் கலைஞர் தோலுரித்துக் காட்டி பகுத்தறிவைப் புகட்டிய திரைக்காவியம்தான் பிள்ளையோ பிள்ளை.”

...காட்சி விரியும்

## வரலாற்றுக்கு வலிமை சேர்க்கும் புது நூல்கள்!




திராவிட இயக்க வரலாற்று வாசிப்புக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்து வருபவர் பத்திரிகையாளர் திருமாவேலன். இவர் எழுதிய, ‘இவர் தமிழர் இல்லை என்றால் எவர் தமிழர்?’, ‘ஆதிக்க சாதிகளுக்கு மட்டுமே அவர் பெரியாரா?’, ’திரும்பத் திரும்ப திராவிடம் பேசுவோம்!’ ஆகிய நூல்கள் வரிசையில் தற்போது, ‘தீரர்கள் கோட்டம் தி.மு.க.’, ‘திராவிட அரசியல், திராவிட அரசு இயல்’ ஆகிய இரு நூல்களை கருஞ்சட்டைப் பதிப்பகம் வெளியிட உள்ளது. ரூபாய் 1,900 விலையுள்ள இந்த நூல்களுக்கான முன் வெளியீட்டு விலையாக ரூ.1,500 அறிவிக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 25 வரை முன்பதிவு செய்யலாம்.

தி.மு.க.வின் 75 ஆண்டுக் கால பயணத்தை விவரிக்கும் நூல் ‘தீரர்கள் கோட்டம்’. தமிழ்நாடு இன்று வளர்ந்த மாநிலமாக உள்ளது என்றால், அதன் வளர்ச்சி எப்படி நிகழ்ந்தது எனப் பதிவு செய்கிறது ‘திராவிட அரசியல், திராவிட அரசு இயல்’ நூல். முன்பதிவு செய்தவர்களுக்கு டிசம்பர் 25-க்குப் பிறகு, நூல்கள் அனுப்பி வைக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது கருஞ்சட்டைப் பதிப்பகம்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரைக் காணும் நேர்காணல் வாய்ப்பு!



இரா.வைத்தீஸ்வரி

2016-ஆம் ஆண்டு, சட்டமன்றத் தேர்தலின்போது, தென்காசி தொகுதியில் போட்டியிட விருப்ப மனு அளித்திருந்தேன். தானைத் தலைவர் கலைஞர், இனமானப் பேராசிரியர், இன்றைய கழகத் தலைவர், கழகப் பொதுச் செயலாளர் ஆகியோர் என்னிடம் நேர்காணல் நடத்தினர். தலைவர் கலைஞரை அருகில் இருந்து பார்க்க முடியும் என்கிற ஒரே காரணத்துக்காகவே நேர்காணல் சென்று வந்தேன். என் வாழ்நாளில், ஆகச் சிறப்பான புகைப்படமாக இதைப் பாதுகாத்து வருகிறேன்.

– இரா.வைத்தீஸ்வரி, எம்.ஏ. எம்.எட்.,
ஆசிரியர் (ஓய்வு),
மகளிர் அணித் துணைத்தலைவர்,
தென்காசி தெற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### எடையைவிட மூன்று மடங்கு வெள்ளி!

1982-ஆம் ஆண்டு, கலைஞரின் 59-வது பிறந்த நாள் விழா, ஜூன் 20-ஆம் தேதி சென்னை மாவட்டக் கழகம் சார்பில் நடத்தப்பட்டது. விழாக்குழு சார்பில், கலைஞரின் எடைக்கு எடை 3 மடங்கு வெள்ளிக் கட்டிகள் அளிக்கப்பட்டன. அந்த வெள்ளிக்கட்டிகளையும், குளித்தலை, மதுரையில் கிடைத்த தங்க ஆபரணங்களையும், கழகப் பொருளாளரிடம் அதே மேடையில் ஒப்படைத்தார் கலைஞர். அவற்றின் அன்றைய மதிப்பு 5 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.